உ

சிவமயம்.

பாண்டிவள நாட்டின்கண் உள்ள

சமிவன க்ஷேத்திரமென்னுங் கோவிலூர்

ஸ்ரீலஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிகசுவாமிகள்

ஆதீனமடாலயத்தில்

எட்டாவது குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளவர்கள்

சமாதித் திருக்கோவிலின்

கும்பாபிஷேக விழாமலர்

இது மேற்படி சுவாமிகளின் பாதசேகரர்

சிக்கல் பொருள்வைத்தசேரி கோ. ஆ. பொ. மடம்

தவத்திரு. சோம. இராமலிங்க சுவாமிகளால்

வெளியிடப்பெற்றது.

1974

உ

சிவமயம்.

பாண்டிவள நாட்டின்கண் உள்ள

சமிவன க்ஷேத்திரமென்னுங் கோவிலூர்

ஸ்ரீலஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிகசுவாமிகள்

ஆதீனமடாலயத்தில்

எட்டாவது குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளவர்கள்

சமாதித் திருக்கோவிலின்

கும்பாபிஷேக விழாமலர்

இது மேற்படி சுவாமிகளின் பாதசேகரர்

சிக்கல் பொருள்வைத்தசேரி கோ. ஆ. பொ. மடம்

தவத்திரு. சோம. இராமலிங்க சுவாமிகளால்

வெளியிடப்பெற்றது.

1974

பொருளடக்கம்

கோவிலூர் மடம் மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானதேசிக சுவாமி களவர்களை

ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசார்ய மஹா சமஸ்தான
சிருங்கேரி ஸ்ரீலஸ்ரீ அபிநவ வித்தியா தீர்த்த
பாரதீ யதீந்திர சுவாமிகளவர்கள் ஆசீர்வதித்த

ஆசீர்வாத ரத்தினம்

இஃது

திருவண்ணுமலை ஈசானியமடம்

ஸ்ரீலஸ்ரீ நடேசஞானதேசிகசுவாமிகளவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது.

ாவிலூர் மடத்தி னதிபராய் விரும்பிக்
குறைவறத் தமதற மனைத்தும்
ம்சீர் ஞான குருபரன் ருளி
லுலப்பிலா நிறைந்தவன் பினராய்
சோம சுந்தர ஞான
லதே சிகர்க்கருள் புரிக
ராயு ளுடன்பெருஞ் செல்வஞ்
மௌலியீ சுரரே.

னத்தும் குறைவறவிரும்பி என்றும்
மௌலியீசுரர்தாவில் பேராயுளுடன்
வமருள் புரிக என்றும் அங்வயஞ்

நட்செல்வம், பொருட்செல்வம்.

இன்புற்று வாழ்க.
சிந்மயம்.

24-3

வரு

விறை

வ தானகுரு

ான்

-தேவ



கோவிலூர், மடாலயத்தில் எட்டாவது
ஞானசிரியராக எழுந்தருளியிருந்த

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகள் அவர்கள்

தோற்றம்: 1890 மறைவு: 1971

சிவமயம்

சரித்திர ஆசிரிய விருத்தம்

(இது காரைக்குடி கோவிலூர் மடம் மாணவர்
ஸ்ரீமகா சோமசுந்தர ஐயா அவர்களால்
இயற்றப்பெற்றது)

இருபத்துநான்கு சீர் ஆசிரிய விருத்தம்

செப்புகலி நாலாயி ரத்துத் தொளாயிரம்
சேர்ந்துவரு தொண் ணூற்றினில்
திகழ்வருட மாகிய விரோதிமதி மாசியில்
தேதியொரு முப்பததனில்
திதிசஷ்டி யனுஷநட் சத்திரமும் வாய்ந்துவரு
திவ்யசுப கால மதனில்
செந்திரு நடம்புரியு நகரதன வைசிய
சிகாமணி யெனப்பிறந் தோன்

முப்புவன மும்பரவு கோவிலூர் ஞானவிறை
முதன்முத்து ராமலிங்க
மூர்த்தியொளிர் பீடத்தி லெட்டாவ தானகுரு
மூர்த்தமாய் வீற்றி ருந்தோன்
மூதறிஞ ரண்ண மலைப்பரன் மகாதேவ
முதுகுரவர் இருவர் பாலும்
முந்தையுள வேதாந்த நுண்பொருளை ஐயமற
முழுவதும் உணர்ந்த அறிவோன்

எப்பெரிய உலகவிவ காரங்கள் எய்துகினும்
இறைபத்தி குருபத்திதாம்
எட்டுணையும் நியமங்கள் தவருது செய்துவந்
திறுதிவரை நின்ற பெருமான்
இசைபெருகு தில்லையில் பொன்னம்ப லாசிரியர்
எழின்மடத் ததிபதியுமாய்
இனிதிருந் தீரிடமும் அன்பர்கட் கத்துவித
இன்பநிலை அருள்புரிந்தோன்

ஒப்பரிய சோமசுந் தரதேசி கன்றனக்
குற்றவய தானவெண்பத்
தொருவருடம் உடலொடும் இருந்துசா தாரணத்
துயர்மாசி தேதிநான்கில்
ஒத்தமங் களவாரம் எய்திய சுவாதியன்
றுலகினை மறந்த நிலையாய்
உரைமனு தீதபர சச்சிதா நந்தசிவ
உருவமாய் இலகினனரோ.



உ

சிவமயம்

ஸ்ரீ சோம. இராமலிங்க சுவாமிகள் இயற்றிய

தோத்திரப் பாடல்கள்

முக்குறுணி விநாயகர் துதி

நேரிசை வெண்பா

சீர்கொள் திருத்தில்லைத் தேவாதி தேவன்றன்
சீர்மகனும் முக்குறுணிச் சீர்க்களிற்றை—நேர்மனத்தில்
சாரவைத்துச் சற்குருவைச் சந்ததமும் போற்றுவாம்
தீர வினைமுழுதுந் தீர்த்து.

ஸ்ரீ நடராசர் துதி

தில்லை நடனந் தெரிசிக்கப் பெற்றிட்டால்
வல்வினை போய்விடும் வன்பிறவி—இல்லையே
எல்லை யிதற்கே இயம்புவது வேதந்தான்
சொல்லும் பொருளைநீ சொல்.

ஸ்ரீ உகந்தலிங்க ஞான தேசிகர் துதி

உகந்தானே உன்னைநம்பி னேற்கருள்வாய் நீதான்
அகந்தான் பிரமமென ஐயா—சகந்தன்னில்
சந்ததமும் சாரவருள் வாயெனக்குச் சாந்தமுறப்
பந்தமுற்றும் நீங்கவே பார்.

சற்குரு சோமசுந்தர ஞான தேசிகர் துதி

குவலயம் போற்றும்நல் கோவிலூர்த் தேவே!
பவலயமாக் கும்பந்தம் நீக்கும்—சிவமாக்கும்
சீர்தவமி குஞ்சோம சுந்தரச் செஞ்சுடரே!
தார்புனைமார் பாபாதந் தா. (1)

வேதாந்த மெய்ப்பொருளை வித்தார மாயருளும்
பேதாபே தம்மில்லாப் பேரின்ப—நாதாநீ
எப்பதமுந் தற்பதமாம் என்றிருப்பா யென்றருளி
முற்பிறப்பும் மீட்ட முனி. (2)

சீர்கர்மத் தில்வசிட்ட ராகுமிகு பக்தியில்
சீர்பிரக லாதராம் சீவபரஞ்—சேர்ஞானம்
தேர்சுகராந் தேகமுதல் தீர்மகா ராசாவாம்
தேர்சோம சுந்தர தேசு. (3)

சீர்முத்து ராமலிங்க தேசிகரைப் போற்றுந்தாய்
பார்முத லீன்றதாய் பாரினில்—ஊர்காத்தாள்
சீர்கொற்ற வாளீசர் தேவியவள் சீரடிசேர்
ஏர்சோம சுந்தரசா மி. (4)

சீர்தவமி குஞ்சோம சுந்தரன் சீலமிகும்
நேர்மனஞ்சேர் செம்மல் நெடுஞானத்—தார்புனைந்தோன்
நற்பாதம் போற்றிநாம் நல்லசுகம் நன்கடைவோம்
பிற்பிறவி வாராது பேசு. (5)

சீர்சோம சுந்தரச் செம்மல் திருவடியை
நேர்நெஞ்சே நீநினைந்து வாழ்வாயிப்—பார்புகழும்
கோவிலூர் வேதாந்த நன்மடத்துக் கோமானைப்
பாவவினை போகவே பாடு. (6)

பூதலத்தோர் போற்றுகிற பொன்னம் பலசாமி
மேதக்க நன்மடத்து வேதாந்த—போதகராம்
சீர்சோம சுந்தர சற்குருவின் சீர்பாதம்
நேர்மனமே நீநினைவாய் நின்று. (7)

பெருந்தவம் ஆற்றினுய் பேரின்ப மானுய்
அரும்பொருள் நன்கு அருள்வாய்—தருமம்
தருநகரத் தார்க்குத் தாரணியிற் செம்பொன்
வருமாறு நீசெய் மகிழ்ந்து. (8)

சுத்தப் பிரமசொரூ பன்சோம சுந்தரன்
சத்துச்சித் ரூபானந் தன்பரன்—சத்தியன்
எத்திக்கும் ஏத்தும் குருபீடம் கோவிலூர்
முத்துராம முன்னவனைப் போற்று. (9)

இன்சொல்லுந் தாழ்நடையும் ஈசன்ருள் நோற்பானும்
என்சோம சுந்தரன் என்சாமி—பொன்னெனவே
போற்றும் பொறுமை பொருந்தியநற் சற்குருவாம்
ஏற்றமிகும் அன்னவனே ஏத்து. (10)

குருவே துணை.

உ
சிவமயம்
ஸ்ரீ சற்குரு துணை

வேம்பத்தூர் சௌந்தர பாரதிகள் குமாரன்
ஸ்ரீ அம்பிகா பாரதி சுவாமிகள் காலத்தில்
பாடியது

சந்தக் கவி

பதினான்கு சீர்க்கழில் நெடிலாசிரிய விருத்தம்

சீர்மி குந்திடு செந்நெ லோங்கிடு
செழிப்பார் கோவிலூர் வந்தருள்
தேனிபட்டி மருவு குணமணி
தேனுங்கலை யெலாந் தேர்மணி
ஏர்மி குந்திடு பூதி யணிமணி
யின்ப மேவிய வாசிட்டம்
ஏற்ற மேவிய நன்னூல் பலபல
இன்ப மாகவே சீடர்க்கு

பார்மி குந்திடு வணிகர் போற்றிடப்
பால்போ லுரைத்திடுஞ் சற்குரு
பண்பார் சாலியின் விழா நடத்தியே
பகருங் கவிஞர் தமக்கெலாங்
கார்மி குந்திடு பொன்னை யருளண்ணு
மலையாங் கவிஞர் தேசிகர்
களிக்குங் குருபூஜை செய்தே
வன்னதானம் புரியுங் கண்ணிய

மன்னு கீர்த்தியை மேவு சோம
சுந்தர தேசிக வள்ளலே
மாண்பார் சற்குரு கருணையாலே வளமார்
மேனித் திட மொடு
சென்னெல் வளமொடு நிதியின் வளமொடு
தேசம் புகழுங் கொடையொடு
செழிப்பார் பூஜைசெய் சிந்தை வளமொடு
தேனுஞ் சாலிவா டீச்சுவரி

பொன்னார் மேனியர் கொற்ற வாளீசர்
குலவு கருணையும் பொருந்தியே
புகழ்சேர் கோவிலூர் மடால யத்தினில்
புலவ ரன்பர் புகழவே
கன்னல் நிகர்வே தாந்த மோங்கிடக்
கனக மாரிதான் பெய்து
கற்றோர் சீடர் மகிழக் கருணையாய்க்
கனமா வாழி மன்னியே.

திரு. சொ. தேவராசன்

உற்றாரைத் தான்பிரிந்து ஊர்துறந்து
பேர்துறந்து உடைமை நீத்துப்
பற்றேது மற்றின்றிப் பரம்பொருளாம்
பசுபதிக்கே பாசம் வைத்துக்
கற்றுபோல் கசிந்துருகிக் கொற்றவா
ளீசுரனைக் கலந்து நின்ற
வற்றாத புகழ்சோம சுந்தரதே
சிகன்பாதம் வழுத்தி வாழ்வாம்.

கோவிலூர் மடாலயம் எட்டாவது பட்டம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளவர்கட்குச்
சமாதி கோயில் அமைத்த பள்ளத்தூர் திருவாளர்

உ. அ. பெரி. மு. அருணசலஞ் செட்டியாரவர்கட்கு

ஷ ஞானதேசிக சுவாமிகளின் சீடராகிய

சோம. இராமலிங்க சுவாமிகளவர்கள் கூறும்

வாழ்த்துப்பா

நேரிசை வெண்பா

1. பார்புகழும் பள்ளத்தூர்ப் பண்பாளன் பாக்கியவான்
ஊர்புகழும் நல்லோன் உஅபெரிமு—சீர்திகழும்
பேரார் அருண சலனிந்தப் பேருலகில்
ஏரார் திருப்பணியை ஏற்று.

2. நாடு புகழ்சோம சுந்தர நற்சாமியாம்
கூடு புகழெங் குருவுக்கே—பீடுமிகத்
தன்பொருளும் நன்னகரத் தார்பொருளுங் கூட்டியே
இன்பினுட னேசெய்தான் ஈங்கு.

3. செப்பு புகழ்க்கோயில் செய்தஅரு ணசலந்தான்
இப்புவியிலென்றும் இனிய நல—துப்பமையப்
பல்லாண்டு வாழ்கவெனப் பண்பினெடு வாழ்த்துகிரேம்
சொல்லாண்ட பாட்டைத் தொடுத்து.

துறவுக்கோர் எடுத்துக்காட்டு

கருப்பக்கிளர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று"

என்றார் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர். இதனுடைய பொருள், துறவிகளுடைய பெருமைக்கு ஒப்புக்கூறத் தொடங்கினால் அஃது இவ்வுலகத்திலே பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடத் தொடங்கியதைப் போன்றது என்பதாம். இதனுடைய கருத்துத் துறவிகளுடைய பெருமையைக் கூறமுடியாது என்பதே.

உலகில் துறவை மேற்கொள்ளும் எல்லோருந் துறவிகளாகிவிட மாட்டார்கள். உலக இன்பங்களையெல்லாம் அனுபவிப்பதற்குப் பொன்னும் பொருளும் பிறவசதிகளும் நன்கமைந் திருக்கும் போதே அவைகளையெல்லாம் கான்ற சோறெனவெறுத்துப் பிறவியின் துன்பங்களை யும் பிறவாமையின் பெருமையையும் உள்ளவா றுணர்ந்து துறவை மேற்கொள்பவர்களே உண்மையான துறவிகளாவர்.

வறுமைக் கொடுமையினாலும் மனைவி மக்களிடத்தும் பிறரிடத்தும் ஏற்படும் வெறுப்பி னாலும் துறவை மேற்கொள்வோர் பெரும்பாலும்

போலித்துறவிகளே யாவர். ஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளாகிய நம் சுவாமிகள் வறுமைக் கொடுமையினுலோ உற்ருர் உறவினர் களிடத்து ஏற்பட்ட வெறுப்பினுலோ துறவை மேற்கொண்டவர்களல்லர். பலபிறப்புக்களிலுஞ் செய்த நற்றவப் பயனுல் உலக வாழ்க்கையில் இயற்கையாகவே வெறுப்பு ஏற்பட்டுப் பொன்னும் பொருளும் பிற வசதிகளும் மனைவி முதலிய உற்ருர் உறவினர்களும் இருக்கும் போதே துறவை மேற்கொண்டவர்கள். இவ்வாறு எல்லா வசதிகளும் இனிதமைந் திருக்கும் நிலையில் இளம் பருவத்தில் எவரே துறவினை மேற்கொள்ளத் துணிவர்?

அரசாட்சி செய்திருந்த மகாராசா அரசாட்சிச் செல்வமும் மனைவி தாய்தந்தையர் முதலிய உறவினர்களும் இருக்கும் போதே துறவறத்தை மேற்கொண்டார். நம் சுவாமிகளும் மகாராசாவைப்போல் துறவை மேற்கொண்டவர் கள். ஆகவே இப் பெரியாரை அம்மகாராசா வோடு ஒப்பிட்டுக்கூறுதல் பெரிதும் பொருந்துவதாகும்.

சில துறவிகள் எல்லாவற்றையும்வெறுத்துத் துறவை மேற்கொண்டும், சில அபிமானங்களைத் துறவாமல் அவற்றிடத்திலே மிகுந்த பற்றுக் கொண்டவர்களாக இருக்கிருர்கள். மெய்மை யாகத் துறவினை மேற்கொண்டவர்கள் குறுகிய

மனப்போக்குடையவர்களாக இருக்கமாட்டார்கள். எல்லோரையுஞ் சமநிலையிலேயேகாண்பார்கள். அவர்கட்கு ஆண் பெண் என்ற பேதமும் இருக்காது. இத்தகைய விரிந்த மனப்பான்மை நம் சுவாமிகளிடத்திலே நன்கு அமைந்திருந்தது. தம் குலத்தாரென்றும் பிற குலத்தாரென்றும் சுவாமிகள் எக்காலத்தினும் வேறுபாடு காட்டியதேயில்லை. இவ்வாறே செல்வர்களையும் ஒரு பொருட்படுத்தாதவர்களாக இருந்தார்கள். பணத்தையும் இவர்கள் தொடுவதில்லை. தம் நிலைக்கேற்பத் துறவிகளை-அவருள்ளும் வைராக்கிய சீலர்களாகிய உண்மைத் துறவிகளையே பெரிதும் பாராட்டிப் போற்றினார்கள்.

உண்மைத்துறவுக்கோர் எடுத்துக்காட்டாக நம் சுவாமிகளின் போக்கு அமைந்திருந்தது மற்றைத்துறவிகட்கெல்லாம் மிகுந்த அச்சத்தையும் வியப்பையும் உண்டாக்கியது. நம் சுவாமிகள் தம் குருவின் கட்டளைப்படி காரைமாநகரிற் கைப்பிச்சை யேற்றிருந்த காலத்தில் ஒருநாள் தம்முடைய இல்லத்திலேயேசென்று கைப்பிச்சை யேற்ருர்கள். போலித்துறவியாக ஒருவர் இருப்பின் அவருக்கு இத்தகைய பேதமற்ற மனப்பாங்கு உண்டாகியிருக்குமா? இதிலிருந்து சுவாமிகள் எல்லா இல்லங்களையும் ஒன்ருகவே கருதினர்களென்பது பெறப்படுகின்றதன்ருே? இச்செய்தியைப் பிறர் வாயிலாகப் பின்னருணர்ந்த குருநாதரும் வியப்புக்குள்ளாஞரெனின் வேறு கூறவேண்டுவதென்னே?

நம் சுவாமிகள் சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடாலயத்தின் தலைவராக இருந்த காலத்தும் கோயிலூராதீனத்தின் எட்டாவது ஞானசிரியராக எழுந்தருளியிருந்த காலத்திலும் தம்மை ஒரு மடாலயத் தலைவராகவோ ஞானசிரியராகவோ எண்ணி அதற்கேற்ற சிறப்புக்களாகிய பேராரவாரங்களோடு நடந்து கொண்டவர்கள் அல்லர் என்பது சுவாமிகளை அறிந்திருந்த அனைவரும் நன்குணர்ந்த செய்தியாகும். மடாலயத்தலைமையேற்றபொழுதும் அதன் பொருட்டு மகிழ்ந்தவர்களல்லர். இச்சுமை வந்துசேர்ந்ததேயென்று தாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்தார்கள்.

நம் சுவாமிகள் துருவாச முனிவரைப் போன்று சினமுடையார்போல் வெளிக்குக் காணப்படினும் உள்ளுக்குள்ளே, "கருணை நிறைந்தகம்புறமுந் துளும்பி வழிந்த" கருணைக் கடலாகவே விளங்கினார்கள் என்பதைச் சுவாமிகளோடு பல்லாண்டுகள் நெருங்கிப்பழகியவர்கள் உள்ளவாறுணர்ந்திருப்பார்கள். சுவாமிகளின் பெருமையை உள்ளவாறுணர்ந்திருந்தபடியால் தான் தில்லைத் தீட்சிதர்களுள் சிறப்புற்று விளங்கிய மகா மகோபாத்யாய ஸ்ரீ தண்டபாணி தீட்சிதரவர்களும் பாராட்டிப் போற்றினார்கள். "தாதா கோடிக்கொருவன்" என்பதைப்போல் உண்மைத் துறவிகளும் கோடிக்கொருவராக அவ்வக் காலங்களில் தோன்றுகின்றனர். அத்தகைய துறவிகளுள் ஒருவராகத் தோன்றிய

நம் குருஸ்தானம் ஸ்ரீசோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளை நாமனைவரும் பாராட்டிப் போற்றுவோமாக!

ஓம்
சிவமயம்

ஞானசிரியரும் நால்வகை ஞானதிகாரிகளும்

காப்பு

நேரிசை வெண்பா

"ஞானதி காரிகள் நால்வகைத்திட் டாந்தமும்
தானதி காரிக்குத் தக்கவாதல்—ஆனத
வேதாந்தக் கூற்றும் விளம்பற்கு வன்னிகண
நாதாவை யுள்ளமே நாடு."

மலர் தலையுலகில் வாழும்மக்கள் இலௌகிகர், வைதிகரென இருவகைப் படுவர். உலகம் இயற்கை; அது சத்தியமென்றும், தேகமே நானென்றும் தம் முயற்சியினலேயே சம்பாதிக்கப்பட்ட மனைவி, மக்கள், பொருள் முதலியன மூலமாக வரப்பட்ட வின்பமே பேரானந்தம் என்றும் எண்ணி முயல்பவர்கள் இலௌகிக மனப்பான்மை யுடையவர் ஆவர்.

இறைவனல் சிருட்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் அவனருளாலே அவன்ருள் வணங்கும் பக்தர்களாய் நவவித பக்திகளையும் கடைப் பிடித்து அவற்றின் வழி நடப்பதன் மூலமும் இம்

மண்ணுலகில் மனைவி, மக்கள், பொருள் முதலிய வற்றின் மூலமும் அவ்விண்ணுலகங்களில் பத முத்திகளோ அல்லது காமதேனு கற்பக விருட்சம் அரம்பா முதலிய போகமாதர் முதலியனவற்றின் மூலமும் ஆராத வின்பம் பெற்றுய்யலாமென்று முயலுபவர்கள் வைதிக மனப்பான்மை யுடைய வர்கள் ஆவர்.

இவ்விரு திறத்தாரும் பல பிறவிகளை எடுத்தும் பலவிதமான கர்மங்களைத் தீவிரமான முயற்சியோடு செய்துங்கூட இம் மண்ணுலகில் துக்கம் கலந்த அற்பவின்பமே யடைகின்றனர். நிமிடந்தோறும் சக்கரம் போலச் சுக துக்கங்கள் மாறி மாறி வருதலைக்கண்டு ஏமாற்றமும் ஏக்கமுங் கொள்கின்றனர். இப்படிப்பட்ட இரு வகையினரும் வேத விதியை அறிந்து பலனை விரும்பாது வினைகளை ஆற்றுகின்றனர். அப்படிச் செய்த நிட்காமிய கன்மங்கள் அநேகம் பிறவி களில் செய்தன வெல்லாந்திரண்டு அதன் பலமான நிட்காமிய புண்ணியத்திற்கேற்ப மனத்தின்கண் மாசிலா நிலையானது வந்தெய்து கிறது. அதனால் இராகத்துவேஷாதி அழுக்குகள் நீங்கிய அந்தக் கரணத்தின் கண்ணே விவேக முதயமாகின்றது.

அதன் பின்னர் உண்டாகும் சிந்தனை யாதோ வெனின்:- அரும்பாடு பட்டாலும், சரியாகப் பழுக்காத மாம்பழமானது புளிப்பும் இனிப்பும் மாறி மாறிக் கொடுப்பது கொண்டு

அப்பழம் பூரண இனிப்புக்கொடாதது போல உலக வாழ்க்கை பூரண சுகம் கொடாமல் இருக்கின்றது. ஆதலால் ஒரு குடம் பாலாயினும் துளிவிடம் கலந்த காரணத்தால் அக் குடத்தின் பால் முழுவதையும் வெறுப்பது போல மண், பெண், பொன், என்னப்பட்ட மூவாசைகளையும் வெறுப்போமென்னும் விவேகம் உண்டாகின்றது.

''இருவரி லரசன் றனக்கறி வோங்க விருவகைச் சார்வையு மகற்றிக்
கருவுடற் காவ றனையுங்கை விடுத்துக் கருத்தசை யாதுமெய் யுணர்வை
மருவிடி லகப்பற் றற்றுமேல் வீடு வாய்த்திடு மதற்குமெய்ஞ் ஞானக்
குருவரு ளின்றி விளங்கிடா தெனவே கொண்டனன்
மனத்தினிற் றுணிவே.''

என்று மகாராஜத் துறவில் ஸ்ரீ குமார தேவர் கூறியபடி, ஞான மடையுங் கிரமமிப்படி இருக்கின்றதால் இனி,

''சீவர்க ளிடத்தி லருள்சிவ பக்தி திருந்திய துறவுமெய்ஞ் ஞானம்
ஆவதோர் வடிவாம்''

சுரோத்திரிய பிரம்ம நிஷ்டாபரரான சற்குருவை யடைவோம் என்னும் குருவருளாலே சர்வதுக்க நிவிர்த்தி அடைவோமென்று நிச்சயித்துக் குருவைத் தேடுவார்.

அப்படிப்பட்டவர்களில் நால் வகைப்பட்ட ஞானாதிகாரிகள் உளர். அவர்கள் ''கானவர் வலையிற்பட்டுக் கைதப்பியோடு மான் போலவும்'', ''தலைமயிரில் தீப்பிடித்துக்கொண்டவன் நீரையே நாடுவது போலவும்'', தீவிர

வைராக்கியம் உடையவர்களாய்க் கையில் பழம் பத்திரம், புஷ்பம் முதலானவைகளைக்கொண்டு தாம் தேடிக் கண்டுபிடித்த சற்குருவைச் சரண மடைந்து அட்டாங்காதி நமஸ்காரங்களைச்செய்த பின் ஸ்ரீ குருவை நோக்கி;

"சுவாமி! நான் யார்? இப்பவ மெனக்கு வந்தவா றென்கொல்? நசிப்பதெவரால்? துக்கக் கலப்பில்லா வின்ப மடைவதெப்படி?" என வினவினர்கள். உயர்குருநாதரவர்களும் சின்னட்களுக்குப் பின் சீடர்களின் சதுர்விதப் பணி விடைகளையுங்கண்டு மகிழ்ந்தவராய்ச் சோதித்துப் பார்த்து அவரவர்களின் மனப்பக்குவத்திற் கேற்ப உபமான உபமேயங்களால் வேதத்தின் இரகசியமான பொருளை உணர்த்துவான் வேண்டிச் சீடனை நோக்கி உபதேசிப்பார்.

"ஏ சீடனே! இவ்வுலகின் கண்ணே பிறப்பதும், இறப்பதுங் கிடையாது. மேலுக்கு மேலான வஸ்துவாம் பிரம்மம் ஒன்றே உளது. அந்தப் பிரமம் நீயேயாவாய். உன்னைத் தவிர இரண்டாவது பொருள் இல்லவே இல்லை." "மலடி மைந்தன் போலவும், "முயலின் கோடு போலவும்" திருசியபதார்த்தங்கள் அனைத்தும் அசுத்தமாகும். வெறும் சொல் மாத்திரமே யன்றித் தேகாதிப் பிரபஞ்சம் கிடையவே கிடையாது. நீ இயற்கையாகவே பரமானந்த சொரூபமாய் இருக்கின்றாய்" என்று இவை

முதலான சுருதியின் மகா வாக்கியங்களின் முடிந்த கருத்தைப் பலவிதமான யுக்தி, யனுபவங்களால் உணர்த்தினர். சீடர்கள் கேட்டு விசாரணைசெய்து ஞானமடைந்தார்கள்.

இவர்களில் தீவிர தர அதிகாரி எனப்படும் முதலாவது சீடன் திட அபரோட்ச ஞானத்தைப் பெற்றான். அருகில் கேட்டுக்கொண்டிருந்த மற்ற மூவரும் திடமற்றவர்களாதலால் ஐயம் கொண்டனர். அவர்களில் இரண்டாம் சீடன் கேட்கத்தொடங்கினன்.

"என் அருமைக் குருநாதா! தேகாதிப் பிரபஞ்சங்கள் சொல்மாத்திரமென்று கூறினீர்களே சட்சுவாதி இந்திரிய விஷயமான பதார்த்தங்கள் எல்லாம் தோற்றுகின்றனவே" என வினவினன்.

குருநாதர் பகர்கின்ருர். "அநக! கிளிஞ்சிலில் வெள்ளி, கயிற்றிற் பாம்பு, கட்டையிற் கள்வன் போல மயக்க காலத்தில் தோற்றமுண்டு விசாரித்த பிறகு எப்படி வெள்ளி, பாம்பு, கள்வன் ஆகிய பதார்த்தங்கள் இல்லவேயில்லையோ? அப்படித் தேகாதிப் பிரபஞ்சங்கள் வெறும் தோற்றரவு மாத்திரமேயன்றி உண்மையில் இல்லவே இல்லை" என உபதேசிக்க; அவனும் ஐயமின்றிய திடஞான மடைந்தான். இவனே தீவிர மென்னும் இரண்டாமதிகாரி ஆவன்.

குருநாதரே! கிளிஞ்சில் வெள்ளி, கயிற்றிற் பாம்பு, கட்டையிற் கள்வன் ஆகிய இவைகள் போலப் பிரபஞ்சம் தோற்றுகிறது என்று கூறினீர்களே; விசாரித்தறிந்த பிறகு மேலே சொல்லப்பட்ட வெள்ளி, பாம்பு, கள்வன் ஆகியவைகள் தோற்றுகிறதில்லையே. ஆனால், ஞானமடைந்த பிறகும் தேகாதிப் பிரபஞ்சங்கள் தோற்றிக் கொண்டிருக்கின்றவே'' என மூன்ருமவன் வினவினன்.

''என் பிரியமுடைய மாணவனே! கானல்நீர் வானில் நீலநிறம், கந்தர்ப்ப நகர் ஆகியவைகள் விசாரம் செய்து பிராந்தி நீங்கிய பிறகும் தோற்றிக் கொண்டிருக்கின்றன என்ருலும் வெறும் தோற்றமேயன்றி உண்மையல்லவென்ற திட நிச்சயமிருக்கின்றது. அப்படிப்போல விசாரித்து ஞானமடைந்த பிறகுங்கூடத் தேகாதிப் பிரபஞ்சங்கள் காணப்படுமாஞலும் வெறும் தோற்றமேயன்றி உண்மையில் இல்லவேயில்லை என்பதைத் திடமாயறிவாய்'' என்று இவ்வாறு விளக்கமாய்க்கூற அவனும் விசாரம்செய்து திட ஞானமடைந்தான். இவனே மூன்ரும் அதிகாரியாகிய மந்தன் ஆவன்.

''கிடைத்தற்கரிய சற்குருவே! விசாரித்த பின்னர் கானற்சலம், வானில் நீலநிறம், கந்தர்ப்பநகர் ஆகிய இவைகள் தோற்றரவு மாத்திரமாதலால் சுரோத்திரம் முதலான இந்திரியங்கள் வாயிலாகச் சுகதுக்கானுபவங்கள்

காணப்படவில்லை. ஆனால் இத்தேகாதிப் பிரபஞ்சங்கள் மேற்படி இந்திரியங்களின் வாயிலாகச் சுக துக்கானுபவங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனவே'' எனச் சங்கிக்கக் குருநாதர் கூறுவாராயினர்.

''அன்ப! நீ சங்கித்த சங்கை நன்று. சொப்பனத்தில் பஞ்சகோசங்களும் அவற்றின் காரியமான ஜகத்தும் அவைகளைச் சிருட்டித்த பிரம்மாவும் மற்றுமநேக தேவர்களும், அதில் வாழும் மனைவி மக்கள் முதலான குடும்பமும், சுற்றங்களும் இன்னும் பலவிதமான நிகழ்ச்சிகள் காணப்பட்டும் அவைகளில் சம்பந்தப்பட்டவனையும் சுக துக்கங்களை அனுபவித்தவனையும் இருந்த உனக்கு விழித்துச் சாக்கிராவத்தையை அடைந்தபிறகு முற்கூறியவை காணப்படவில்லையல்லவா? அவைகளோடுகூடி அனுபவித்த சுக துக்கங்கள் எங்கே? முற்றிலுமில்லையல்லவா? அவைகளெல்லாம் எப்படிச் சாக்கிராவத்தையில் இல்லையோ? அப்படிப்போலத் தத்துவஞான சாக்கிரமாகிய விழிப்பு வந்துவிட்டால் இந்திரியங்களின் வாயிலாக வரப்பட்ட சுகதுக்காதிகளும் தேகம் முதலிய சகல பிரபஞ்சங்களும் இல்லவே இல்லை. நம்மாணை மறந்திடாதே என்று திருவாய் மலர்ந்தருளினர். அன்புச் சீடனும் விசாரம் செய்துதிட ஞானமடைந்தான். இவனேநான்காவதான மந்ததர அதிகாரியாவன்.

இவ்வண்ணமாக ஞானசாரியர்கள் தம்மைச் சரணமடைந்த மாணவர்களின் மனப்பரிபாகத் திற்குத்தக நால்வகையாகப் பிரித்துத் திருட்டாந் தங்களேயும் நால்வகையாகப் பிரித்துக் கூறி உபதேசிப்பார்கள் என்ற வேதக் கருத்துக்களே உள்ளடக்கிவைத்து நன்னிலந் திருத்தாண்டவராய சுவாமியவர்கள் தம்முடைய கைவல்லிய நவநீத மென்னுமரும்பெரும் ஞான நூலின் முதற்படலம் 108-ஆவது பாட்டில் அருமையாக விளக்கு கின்றூர்:

6 3 8 9
"கானநீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர் கனூர்
7 4 1 2
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
5
பீனமாந் தறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞான மெய் மகனே யுன்னே நம்மாணே மறந்திடாதே."

1, 2 தீவிர தர அதிகாரிக்கும்
3, 4, 5 தீவிர அதிகாரிக்கும்
6, 7, 8 மந்த அதிகாரிக்கும்
9 மந்ததர அதிகாரிக்குமாகத் திட்டாந் தங்களாகும்.

மேற்கூறிய குருமூர்த்தியைப்போலக் காரைக்குடி கோவிலூர் ஆண்டவர் என வழங்கும் ஸ்ரீ முத்தி ராமலிங்க ஞானதேசிக சுவாமியவர்களால் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக் கப்பட்ட வேதாந்த மடாலயத்தில் எட்டாவது குருமூர்த்தியாக எழுந்தருளிய ஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளாகிய எங் குருநாதரும்

முற்கூறியவாறு தம்மைச்சரணமடைந்த அதிகாரி களைச் சோதனைசெய்து ஆட்கொண்டு ஞானோப தேச மளிப்பதில் வல்லமையுடையவர்களா யிருந்தார்கள்' அதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவாம்:-

நம் குரு சுவாமிகள் சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பலஞானதேசிக சுவாமிகள் மடாலயத் தலைவராக இருந்த காலத்திலும், அதற்குப்பின் கலி 5048 சர்வஜித் வருடம் ஆனிமீ 12-ஆம் நாள் (26—6—1947) கோவிலூர் ஆதீன 8ஆவது பட்டத்துக் குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்து கலி 5071 சாதாரண வருடம் மாசிமீ 4ஆம் நாள் மங்களவாரம் சுவாதி நட்சத்திரங் கூடிய நாளில் (16—12—1971) இல் தாம் விதேக கைவல்லிய மடையும் நாள் வரைக்கும் உள்ள காலத்தில் அநேகம் பேர்கள் அடைக்கல மடைந்தார்கள். அவ்வாறடைந்தவர்களை ஓராண்டு முதல் 12 ஆண்டுகள் வரைக்கும் வருணங்களுக்குத் தக சோதனை செய்ய வேண்டிய கடமை குருமூர்த்திக் கிருக்கின்ற காரணத்தால் நம் குருமூர்த்திகளும்

"தேசிகரு மாணவர்கள் செய்தி யுணர்ந்திடவே
சிறியோரைப் பெரியோர் செய்தொழிலதனிற் செறித்தும்
ஏசிலராம் பெரியோரை யீனமாந் தொழிற்கே
யிசைத்து மடித்தும் வைதுமிவ்வாறு செயவுங்
கூசியிடா திட்டபணி செய்துகுரு பக்தி
குறைவிலராய் நம்பினராய்த் துரோக மின்றி
மாசிலராய் மனவாக்குக் காயத்தாற் குருவின்
வாக்கிய பாலனஞ் செய்யு மதிமானுமாயே"

என்று சிவநெறிப் பிரகாசமென்னும் நூலில் கூறியவாறு மாணவர்களின் தரத்திற்குத் தக சோதனைகளைச் செய்தார்கள். பலர் சோதனைகளுக்கு ஆற்ருதவர்களாய் ஸ்ரீ குருமூர்த்தியின் உட்கருத்தை உணராது வெளியேறினுர்கள்.

"தேசிகன்பாற் பற்பலதீக் குணங்கள் செறியினுநம்
பாசப் பிராந்திக்கிவை தோற்றிய விறைபாலிலையென்
ருசறு பத்தியினேர்ந் தெவ்விதத்து மவனருளைத்
தேசங்குலவ வளர்ப்போன் சற்சீடன் றெரிந்திடினே"

என்று அருட்பிரகாசம் நூலில் கூறிய கருத்துக்களைத் தம் மனதிற்கொண்ட பக்குவிகளான அநேகம் பேர்கள் ஸ்ரீ குரு சுவாமிகளின் உட்கருத்தை உணர்ந்தவர்களாய்ச் சோதனைகளுக்கிளையாமல் தேகச் சாயையைப்போல் விதேக கைவல்லியம் வரைக்கும் நீங்கா திருந்தனர். நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தரஞானதேசிக சுவாமிகளாகிய சுரோத்திரிய பிரம்ம நிஷ்டராய எம் குருநாதர் சோதனைகளுக்கு முன் யாரையும் சீடனுக அங்கீகரிக்கமாட்டார்கள். சோதித்துத் தெளிந்த பின் எந்தக்காரணத்திஞலும் ஐயுருர்கள்.

"தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவுந்
தீரா விடும்பை தரும்"

என்ற திருவள்ளுவனரின் திருக்குறள் இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாக விளங்கினுர்கள் என்பது மிகையாகாது.

மேலும், பரமஹம்ச சந்யாசிகளாயிருக்கின்றவர்கள் வேதாந்த சிரவண, மனன, நிதித்தியாசனுதிகளை நித்திய கர்மங்களாகச்செய்ய

வேண்டுமென்னும் வேத வாக்குப்படி சந்நியாச தர்மத்தில் அழுத்தம் உடையவர்களாதலால் நாள்தோறும் பாடம் கட்டளை முதல் வாசிட்ட மீருக உள்ள பதினறு ஞானநூல்களில் மனனமுடையோர்க்குத் தேவையானவைகளை அதிகாரிகளுக்குத் தக ஞானோபதேசம் செய்து வந்ததல்லாமல், மாணமதுரை ஸ்ரீ நாராயணசுவாமிகள் மடத்தில் சமாதிகொண்டு விளங்கும் நற்குண நற்செய்கைகளின் சிகரமான அனுபவ திட ஞானியாம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளை இரண்டாம் பாடம் சொல்லும்படி செய்துஞான சாத்திர வாசனையைத் திடப்படும்படியும் ஆக்கிய முறைமையைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஆகவே அவர்களை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். நமது ஸ்ரீ குருநாதர் மடத்துச் சம்பிரதாயங்களைச் சரியாக நடத்தினர்கள்.

இப்படி அநேகவிதமான சிறப்புக்களையுடைய நமது ஸ்ரீ குருசுவாமிகளுக்குச் சமாதி ஆலயக் கற்றிருப்பணி முடிந்து பிரமாதீச வருடம் மாசிமீ 1 ஆந் தேதி (13—2—74) புதன்கிழமை சப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கும்ப லக்கினமும் கூடிய நன்னளில் நடைபெறும் **கும்பாபிஷேக விழா மலரில்** ஓரிதழாக விளங்கும் இச்சிறு கட்டுரையில் குற்றங்குறைகளிருப்பினும் பெரியோர்கள் பொறுத்தருள வேண்டுகிறேன்.

சோம. கோபாலசுவாமி,
காரைக்குடி, கோவிலூர் மடாலயம்.

நன்றி நவிலல்

நமது ஸ்ரீ குருமூர்த்தியின் சமாதிக்கோவில் கட்டுவதற்கு மிகுந்த பிரியத்துடனும் ஆர்வத்துடனும் வசூல் புத்தகம் கொடுத்துப் பல நகரத்தார்களிடமும் சொல்லி அனுக்கிரகஞ் செய்து கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடத்தி நம்மனோர்க்கருள் புரியும் நம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானங்களையும் அதற்கு உறு துணையாகவிருந்து திருப்பணியையும், கும்பாபிஷேகத்தையும் மிகச் சிறப்பாக நடத்திய பள்ளத்தூர் திருமிகு உ. அ. பெரி. மு. அருணாசலஞ் செட்டியாரவர்களையும், பலதடவை பலபேர்களிடம்சென்று வசூல் செய்து பாடுபட்ட திருமிகு நா. க. லெ. இராமசாமி செட்டியாரவர்களையும் மிகுந்த பிரியத்துடனே பொருள் உதவி செய்து உதவிய நம் நகரத்தார்களாகிய செல்வந்தர்களையும் வாயார வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

வாழ்க நம் குருசந்நிதானம் நீடூழி.

சோம. இராமலிங்கசுவாமி.

ராஜன் பிரஸ், நாகப்பட்டினம்.